## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# தமிழ் வளர்ச்சி

### மானியக் கோரிக்கை எண்–46

அறிவிப்புகள்

2022–2023


**தங்கம் தென்னரசு**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சித் துறை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,**

தமிழ் வளர்ச்சித் துறைக்கான 17 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**தங்கம் தென்னரசு**
தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்

**1. மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும். இதற்கென ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூபாய் 5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகளுக்கு ரூபாய் 5 கோடியும் இவ்வாண்டு போட்டிகள் நடத்திட ரூபாய் 36 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 5.36 கோடி வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் மாணவர் தமிழ் மன்றங்கள் அமைத்து அதன் வாயிலாக அந்தந்த கல்லூரிகளில் மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும். இதற்கென ஒவ்வொரு கல்லூரிக்கும் வைப்புத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகள் தெரிவு செய்து வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக வைப்புத் தொகைக்கு ரூபாய் 5 கோடியும் இவ்வாண்டு போட்டிகள் நடத்திட ரூபாய் 36 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 5.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6,218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றங்களை மேம்படுத்தி ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நிகழ்ச்சிகள் நடத்திட ஒவ்வொரு பள்ளிக்கும் ஆண்டுதோறும் ரூபாய் 9,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 5.60 கோடி வழங்கப்படும்.**

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ் மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்திடும் வகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6,218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் தமிழில் ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நடத்திட ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூபாய் 9,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் ஆவணப்படுத்தப்பட்டு மீட்டுருவாக்கம் செய்யப்படும். இதற்கென ரூபாய் 2.11 கோடி வழங்கப்படும்.**

தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுக் கலைகளை மீட்டெடுத்தல், நாட்டுப்புறவியல் துறையை மேம்படுத்துதல், நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைத்தல், சிலப்பதிகாரம் காட்டும் இசை ஆடல் அமைதிகளை மீட்டுருவாக்கி ஆவணப்படுத்துதல், கல்வெட்டுகள் காட்டும் தமிழ்க் கலைப் பண்பாடு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளுதல், கைவினைப் பொருட்கள் உருவாக்கிடத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல், நூல்கள் வெளியிடுதல், கருத்தரங்கு நடத்துதல் ஆகிய திட்டப் பணிகள் 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 2.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் (NAAC) உயர்புள்ளிகளைப் பெற்றிடத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சிறப்புச் சீர் காப்பு செய்யப்படும். இதற்கென ரூபாய் 2 கோடி வழங்கப்படும்.**

தமிழ்ப் பல்கலைக்கழகம் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர் புள்ளிகள் பெற அலுவலகக் கட்டடம், நூலகம், கூத்துக்களரி வளாகம் உள்ளிட்டவற்றின் கட்டமைப்புகளுக்குச் சிறப்புச் சீர் காப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் தமிழக அரசின் உயர் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தொழில்நுட்பக் கல்வி வட்டம் வழி மேற்கொள்ளப்படவும் பேராசிரியர்களின் ஆய்வுக்கான (seed money) அடிப்படை நிதி நல்கை வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**5. திருக்குறளுக்கு ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) அங்கீகாரம் பெறும் வகையில் பாரிசில் உள்ள யுனெஸ்கோ அரங்கத்தில் திருக்குறள் மாநாடு நடத்திட ரூபாய் 1 கோடி நிதியுதவி வழங்கப்படும்.**

திருக்குறளை உலக நூலாக யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், திருக்குறளைப் பலமொழிகளில் மொழி பெயர்த்தவர்கள், உரையாசிரியர்கள் ஆகியோர் பங்கேற்கும் வகையில் பிரான்சு நாட்டின் பாரிசு நகரில் உள்ள யுனெஸ்கோ விழா அரங்கத்தில், பாரிசு பன்னாட்டு உயர் கல்வி நிறுவனத்துடன் இணைந்து 2 நாட்கள் திருக்குறள் மாநாடு நடத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகத்தை மேம்படுத்திடவும், நூலகத்தை கணினிமயமாக்கி தரம் உயர்த்திடவும் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் நூலகத்தினை மேம்படுத்திடவும் ரூபாய் 78 இலட்சம் வழங்கப்படும்.**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகத்திற்கு தேக்கு மர அலமாரிகள் இரும்பு அடுக்குகள், மாணவர்கள் படிப்பதற்கான மேசை, நாற்காலிகள், கணினி மற்றும் துணைப் பொருட்கள் கொள்முதல் செய்திடவும் ஆய்வு நூலகத்திலுள்ள நூல்களின் விவரங்களைக் கணினியில் உள்ளீடு செய்து கணினி மயமாக்கப்பட்ட நூலகமாகத் தரம் உயர்த்திடவும் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்கக நூலகத்தை மேம்படுத்திடவும் தொடராச் செலவினமாக ரூபாய் 73 இலட்சமும் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 7. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஒருங்கிணைந்த கட்டமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 61.50 இலட்சம் வழங்கப்படும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நிருவாகக் கட்டடத்திலுள்ள இயக்குநர் அறை கட்டமைப்பு, அலுவலகப் பணியாளர்களுக்கு மேசை, நாற்காலிகள் கொள்முதல், கருத்தரங்க அறையில் பார்வையாளர்கள் அமர்வதற்கு 200 நாற்காலிகள் கொள்முதல், கூட்ட அரங்கின் கட்டமைப்பை மேம்படுத்துதல், நிறுவன வளாகத்தில் பகிரலை வசதியுடன் கூடிய இணைய இணைப்பு ஏற்படுத்துதல், நூலகத்திற்கு நவீன நகல் எடுக்கும் இயந்திரம் கொள்முதல் ஆகிய ஒருங்கிணைந்த கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 56.50 இலட்சமும் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 61.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்குக் கணினி மற்றும் அச்சுக் கருவிகள் வழங்கப்படும். இதற்கென ரூபாய் 57 இலட்சம் வழங்கப்படும்.**

தற்போது அனைத்து அரசு அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு, சம்பளம் பெறுதல் போன்ற பணிகள் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருவதால் கணினியின் பயன்பாடு இன்றியமையாததாக உள்ளது. எனவே, தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுலகங்களின் அலுவலகப் பயன்பாட்டுக்குப் புதியதாகக் கணினிகள், அச்சுக் கருவிகள் மற்றும் ஒளிப்படிக் கருவிகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 52 இலட்சமும் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்கம் செய்வதற்காகத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து துறைசார் வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டு புதிய கலைச் சொல் அகராதிகள் உருவாக்கப்படும். இதற்கென ரூபாய் 35 இலட்சம் வழங்கப்படும்.**

வளர்ந்து வரும் நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப அனைத்துத் தளங்களிலும் தமிழ் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்யும் வகையில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கம் செய்வதற்காகத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து துறைசார் வல்லுநர்களைக் கொண்ட குழுக்கள் அமைத்து, புதிய கலைச் சொல் அகராதிகள் உருவாக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 25 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 10. மதுரை, உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் அயல்நாடு வாழ் தமிழர்களின் படைப்புகளுக்காகச் சிறப்புப் பிரிவு ஏற்படுத்திடவும் உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தைப் புனரமைப்பு செய்திடவும் ரூபாய் 26 இலட்சம் வழங்கப்படும்

அயலகத்தில் வாழும் தமிழர்கள், தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை அங்கு வாழும் எதிர்கால சந்ததியினர் அறிந்திடும் வகையிலும் அந்நாட்டில் தமிழ் இலக்கியம் காலூன்றும் வகையிலும் அந்நாட்டுச் சூழல்களுக்கேற்ப தமிழ் மொழியில் இயல், இசை, நாடகம் மற்றும் பல்வேறு துறைகளில் பன்னெடுங்காலமாக படைப்புகளைப் படைத்து வருகின்றனர். அப்படைப்புகளை உலகத் தமிழ்ச்சங்க வளாகத்தில் சிறப்புப் பிரிவு ஏற்படுத்திக் காட்சிப்படுத்தியும் விற்பனை செய்தும் அவர்களின் படைப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்க வழிவகை செய்திடத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும். மேலும், உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள நூலகம் புனரமைப்பு செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 20 இலட்சமும் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வகையில் மொத்தம் ரூபாய் 26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**11. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தம் சந்ததியினர் மொழி வரலாறு குறித்து அறிந்துகொள்ளும் வகையில் அங்குள்ள நூலகங்களுக்குத் தமிழ் நூல்கள் வழங்கப்படும். இதற்கென ரூபாய் 20 இலட்சம் வழங்கப்படும்.**

புலம் பெயர்ந்து அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் அவர்தம் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக அடிப்படைத் தமிழ் இலக்கியம், இலக்கணம், தமிழ்ப் பண்பாடு மற்றும் மொழி வரலாறு குறித்த நூல்கள் அளித்து தமிழ் மொழியை மறக்காமல் அவரது சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையில் இந்த ஆண்டு செருமனியில் உள்ள முன்சென் தமிழ்ச் சங்கத்திற்கும் (Munich) மற்றும் பிரான்சில் உள்ள பாரிசு நகரில் செயல்பட்டு வரும் பாரிசு பன்னாட்டு உயர் கல்வி நிறுவனத்திற்கும் மேலும் மியான்மார் நாட்டிற்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் நூல்கள் மற்றும் நிலைப்பேழைகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழின் மீது ஆர்வத்தையும் தமிழில் எழுதுவதை ஊக்குவிக்கும் வகையிலும் மாவட்ட அளவில் தமிழ் கையெழுத்துப் போட்டிகள் நடத்தப்படும். இதற்கென ரூபாய் 16.72 இலட்சம் வழங்கப்படும்.**

பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியை அழகாக எழுதி வருபவர்களை ஊக்குவிக்கவும் இதனடிப்படையில் பிற மாணவர்களுக்குத் தமிழில் அழகாக எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் தமிழ் கையெழுத்துப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 16.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**13. அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையத்தில் பயிலரங்கம் நடத்திடவும் மண்டல மற்றும் மாநில அளவில் தமிழில் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் போட்டிகள் நடத்திடவும் ரூபாய் 16 இலட்சம் வழங்கப்படும்.**

தமிழகத்தில் உள்ள அனைத்து பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், பொறியியல் பேராசிரியர்கள் மற்றும் இதழியலாளர்கள் அனைவரும் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியில் அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பங்களை எளிதில் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் தமிழில் எழுதுவதற்கான பயிலரங்கு நடத்தப்படும். இதற்கென ரூபாய் 6 இலட்சம் வழங்கப்படும். பொறியியல் மாணவ, மாணவியர்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் தமிழில் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் போட்டிகளை மண்டல மற்றும் மாநில அளவில் நடத்திட ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும். இவ்வகையில் தொடர் செலவினமாக ரூபாய் 16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. கலைப் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து திருக்குறளை நாடக வடிவிலும் நாட்டுப்புறப் பாடல்கள் வடிவிலும் பொதுமக்களிடம் கொண்டு செல்ல முன்னெடுப்புகள் எடுக்கப்படும். இதற்கென ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.**

திருக்குறள் கருத்துகள் ஏட்டளவில் நின்றுவிடாமல் மாணவர்கள் மட்டுமல்லாது பொது மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்திட ஏதுவாக திருக்குறளை மையமாகக் கொண்டு வாழ்வியல் சூழலோடு தொடர்புப்படுத்தி நன்னெறிக் கதைகள், நாடகங்கள் மற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் வடிவில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வழிவகை செய்யப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டத்தை முழுமையாக மற்றும் சிறப்பாகச் செயல் படுத்தும் முதல் மூன்று மாவட்டங்களுக்குப் பரிசுத் தொகை, கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியன மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வழங்கப்படும். இதற்கென ரூபாய் 7 இலட்சம் வழங்கப்படும்.**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அரசு அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் தமிழில் கையொப்பமிடுதல் மற்றும் கடைகள், நிறுவனங்கள், உணவகங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகள் தமிழில் அமைந்திருத்தல் உள்ளிட்ட வகையில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் மூன்று மாவட்டங்களைத் தெரிவு செய்து பரிசுத் தொகை, கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியன மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாவட்ட ஆட்சியர்களிடம் வழங்கிச் சிறப்பிக்கப்படும். பரிசுத் தொகையிலிருந்து அம்மாவட்டத்தில் தமிழ் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**16. தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர்கள் உள்ளிட்ட அனைவரும் இணையதளம் மற்றும் அலைபேசி மூலம் ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களைத் தாமே உள்ளீடு செய்திடும் வகையில் "கலைச்சொல் தொகுப்பி" எனும் செயலி தமிழ் வளர்ச்சித் துறை மூலம் உருவாக்கப்படும். இதற்கென ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.**

உலகெங்கிலும் இருந்து தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என அனைவரும் இணையதளம் மற்றும் அலைபேசி மூலம் ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களைத் தாமே உள்ளீடு செய்யும் வகையில் "கலைச்சொல் தொகுப்பி" எனும் செயலி உருவாக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. அனைத்துக் காட்சி ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் தமிழ் உச்சரிப்புச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும். மேலும் தமிழைச் சிறப்பாக உச்சரிக்கும் செய்தி ஊடகங்களுக்கு மாநில அளவில் சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது வழங்கப்படும். இதற்கென ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.**

ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளைத் தவறில்லாமலும், அழகாகவும், சரியாகவும் உச்சரிக்கும் செய்தி வாசிப்பாளர்கள் நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுக்கு நான்கு பேரைத் தெரிவு செய்து அவர்களைப் பாராட்டி ரூபாய் 25,000 பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். மேலும், அனைத்துக் காட்சி ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் ஆண்டுக்கு நான்கு தமிழ் உச்சரிப்புச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.